பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**22 12 2025** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தனியார் நிறுவனங்கள், அணுசக்தி உற்பத்தியில் பங்கேற்பதற்கான புதிய மசோதாவிற்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

2. மகாராஷ்டிரா மற்றும் அருணாச்சலப்பிரதேச உள்ளாட்சித் தேர்தல்களின் வெற்றி, மக்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படும் தமது அரசுக்கு கிடைத்த நற்சான்று என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. ஒப்பந்த செவிலியர்களின் கோரிக்கைகள் குறித்து தமிழக அரசு பரிசீலிக்கும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

4. ஆட்சிக்கு வந்தால் 150 நாட்கள் வேலை தருவோம் என்று அளித்த வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

**5.** இலங்கைக்கு எதிரான முதலாவது மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா **8** விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தனியார் நிறுவனங்கள், அணுசக்தி உற்பத்தியில் பங்கேற்பதற்கான மசோதாவிற்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இந்தியாவின் அணுசக்தியை நிலையான முறையில் பயன்படுத்தி மேம்படுத்தும் "சாந்தி மசோதா" மூலம் அணு ஆற்றல் துறையை சார்ந்த அனைத்து சட்டங்களையும் ஒருங்கிணைத்து புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அணு ஆற்றல் துறையின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த **1962**ஆம் ஆண்டு அணுசக்தி சட்டத்தையும், **2010**ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அணு சேதத்திற்கான குடிமைப் பொறுப்பு சட்டத்தையும் இந்தப் புதிய சட்டம் ரத்து செய்கிறது.

இந்த சட்டத்தின் மூலம் அரசின் அனுமதியுடன் தனியார் நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் அணுமின் நிலையங்களைக்

கட்டவும், சொந்தமாக வைத்திருக்கவும், இயக்கவும் பின்னர் அவற்றை அகற்றவும் முடியும்.

<<<<>>>>

மகாராஷ்டிரா மற்றும் அருணாச்சலப்பிரதேச உள்ளாட்சித் தேர்தல்களில் பிஜேபி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி மக்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதற்கான சான்று என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது மக்களின் நம்பிக்கையை பிரதிபலிப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த வெற்றிக்காக பாடுபட்ட பிஜேபி மற்றும் கூட்டணிக் கட்சித் தொண்டர்களை அவர் வெகுவாக பாராட்டினார்.

மாநிலங்களின் வளர்ச்சியில் மேலும் கவனம் செலுத்த இந்த வெற்றி உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலம் முழுவதும் உள்ள ஒவ்வொரு குடிமகனின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்ற புதிய உற்சாகத்துடன் அரசு செயல்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி, வளர்ச்சி மற்றும் பொதுநலனுக்கு முன்னுரிமை அளிக்கும் அரசியல் வெற்றி பெற்றதற்கான அடையாளம் இது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை இது பிரதிபலிக்கிறது என்று பிஜேபி தேசிய செயல்தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த பாரதத்தை கட்டமைக்கும் பணியில் முனைப்புடன் இயங்கி வரும பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான அரசு ஊரக வேலைத் திட்டத்திற்காக கொண்டுவந்துள்ள புதிய மசோதா பலன்களை அளிக்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் பத்திரிகைக்கு அளித்துள்ள விரிவான விளக்கத்தை அவர் தமது சமூக வலைதளப் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

ஆரவல்லி மலைத்தொடரில் சுற்றுச்சூழலை பாதிக்கும் விதத்திலான குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் அமைக்கும் பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்றும், அங்கு சூழலியலுக்கு எந்தவிதமான அபாயமும் இல்லை என்றும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி உள்ளூர் நில அமைப்பைவிட 100 மீட்டர் அல்லது அதற்கு மேல் உயரம் கொண்ட எந்தவித கட்டட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறியுள்ளது.

முழு சூழலியல் அலகுகள் பாதுகாக்கப்படுவதாகவும், இதன் மூலம் மண்ணின் நிலைத்தன்மை, நீர் ஊடுருவல் ஆகியவை பாதுகாக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

500 மீட்டர் மண்டலத்திற்குள் உள்ள அனைத்து சுரங்கம் தோண்டுவதற்கான உரிமங்கள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

ஆரவல்லி மலையின் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு அந்த மலைத்தொடர் பாதுகாக்கப்பட்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஒப்பந்த செவிலியர்களின் கோரிக்கைகள் குறித்து தமிழக அரசு பரிசீலிக்கும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒப்பந்தத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்றும், எனவே அவர்கள் தங்களது போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**(Voice Byte - MaSu - 40 Sec)**

<<<<>>>>

திமுக ஆட்சிக்கு வந்தால் **150** நாட்கள் வேலை தருவோம் என்று அளித்த வாக்குறுதியை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இதுவரை நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், செய்தியாளர்களிடம் பேசினார்.

**100** நாட்கள் வேலை திட்டத்திற்கு எந்தப் பெயர் வைத்தால் என்ன என்று கேள்வி எழுப்பிய அவர், திமுக தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாததை சுட்டிக்காட்டினார்.

தமிழக அரசின் பல்வேறு துறை ஊழியர்களும் தங்களது கோரிக்கைகளுக்காக போராட்டம் நடத்தி வரும் வேளையில் அதைக் கண்டுகொள்ளாமல் முதலமைச்சர் செயல்படுவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத்தலங்களான தொட்டபெட்டா, பைன் ஃபாரஸ்ட், அவலாஞ்சி, பைக்காரா படகு இல்லம் உள்ளிட்ட முக்கிய இடங்களை இன்று முதல் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடலாம் என்று வனத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் தகவல்...

**(Voice Byte - Saravanan - 37 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

**30** போர் விமானங்கள் மற்றும் இரண்டாயிரம் கடற்படை வீரர்களை தாங்கிச் செல்லும் நவீன போர்க்கப்பலை ஃபிரான்ஸ் உருவாக்கும் என்று அந்நாட்டு அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் தெரிவித்துள்ளார்.

------------

பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் இன்று நடைபெற இருக்கும் தெஹ்ரீகே இன்சாஃப் கட்சித் தொண்டர்களின் போராட்டத்தை ஒட்டி காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

*<<<<>>>>*

திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டியில் **461** பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாநில அமைச்சர் திரு. சக்கரபாணி வழங்கினார்.

*<<<<>>>>*

கொடைக்கானல் மலைப்பகுதியில் வெப்பநிலை **6** டிகிரி செல்சியசுக்கும் குறைவாக இருப்பதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

*<<<<>>>>*

நாகை மாவட்டம் வேளாங்கன்னியில் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி நூற்றுக்கணக்கானோர் சிகப்பு தொப்பி அணிந்து கிறிஸ்துமஸ் தாத்தா வேடத்தில் ஊர்வலம் சென்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

*<<<<>>>>*

சீர்காழி அருகே அன்னை அஜ்மத் பீவி தர்காவின் **85**வது ஆண்டு சந்தனக்கூடு கந்தூரி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<>>>>

மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா கலைநிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக நேற்று தொடங்கியது.

<<<<>>>>

தேனியில் நடைபெறும் புத்தக திருவிழாவை மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்ஜித் சிங் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

பெரம்பலூர் மாவட்டத்தில் பள்ளிகளுக்கு இடையிலான **69**வது தேசிய அளவிலான டேபிள் டென்னிஸ் போட்டிகள் நடைபெற இருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திருமதி மிருனாளினி ஆய்வு செய்தார்.

<<<<>>>>

காஞ்சிபுரத்தில் புத்தக திருவிழா நடைபெற்று வருகிறது. நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் ஏராளமானவர்கள் பங்கேற்று புத்தகங்களை வாங்கிச் சென்றனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இலங்கைக்கு எதிரான முதலாவது மகளிர் டுவென்டி - டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு 121 ரன் எடுத்தது.

பின்னர் பேட் செய்த இந்தியா 14 புள்ளி 4 ஓவரில், 2 விக்கெட் இழப்பிற்கு 122 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

சர்வதேச மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் 153 ஆட்டங்களில் விளையாடி 4 ஆயிரம் ரன்கள் குவித்த முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை ஸ்மிருதி மந்தனா படைத்துள்ளார்.

**<<<<The End>>>>**